**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 209** **நாள் : 20.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி மெரினா கடற்கரையில் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக புதியதாக கண்காணிப்பு கேமராக்கள், உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கப்படும் !**

**மெரினா கடற்கரையில் மேற்கொள்ளப்பபட்டு வரும் தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளை இன்று ஆய்வு செய்த ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களும் மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் தெரிவித்துள்ளனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், மெரினா கடற்கரையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளை இன்று (20.12.2018) காலை ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்களும், மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

உலகின் இரண்டாவது பெரிய கடற்கரையான மெரினா கடற்கரையில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, கடற்கரையை தூய்மையாக பராமரிக்கும் வகையில் அங்குள்ள சிறு கடைகள் முறைப்படுத்தப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சி துப்புரவு மற்றும் சுகாதாரப் பணியாளர்களால் அங்கு சேகரமாகும் குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு, தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநகர காவல் துறையின் சார்பாக பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ரோந்து காவலர்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று காலை மெரினா கடற்கரைக்கு திடீர் ஆய்வு மேற்கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களும், மாநகர காவல் ஆணையாளர் அவர்களும் அங்கு முறைப்படுத்தப்பட்ட கடைகளையும், மேற்கொள்ளப்பட்டு வரும் துப்புரவு பணிகளையும் ஆய்வு செய்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.6.78 கோடி மதிப்பீட்டில் தலா ரூ.84.75 லட்சம் மதிப்பிலான 8 நவீன டிராக்டர் மூலம் இயக்கப்படும் மணல் ஜலிக்கும் இயந்திரங்களை கொண்டு கடற்கரையை தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வியந்திரங்கள் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் போன்ற தேவையற்ற பொருட்களை தனித்தனியே பிரித்தெடுக்கும் திறனையும், மேலும் ஒரு மணிநேரத்தில் 8 ஏக்கர் பரப்பளவுடைய இடத்தை சுத்தம் செய்யும் திறனையும் உடையது.

கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என பிரிக்கப்பட 150 புதிய குப்பைத் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி மெரினா கடற்கரையில் இருந்த வியாபார கடைகள் முறைப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இவ்விடங்களில் பொதுமக்களுக்கு இடையூறின்றி,

தூய்மைப்படுத்தும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் சார்பில் மெரினாவிலிருந்த ஆதரவற்றோர் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்ட 45 நபர்கள் மீட்கப்பட்டு காப்பகங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியும், வரலாற்று சிறப்புமிக்க மெரினா கடற்கரையை தூய்மைப்படுத்தி, மேலும் அழகுப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெறும் என **ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

மாநகர காவல் துறையின் சார்பில், மெரினா கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும், சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் வகையில் புதியதாக கண்காணிப்பு கேமராக்களும், உயர்கோபுர மின்விளக்குகளும் அமைக்கப்படவுள்ளன எனவும், கடற்கரையில் ரோந்து காவலர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, இரவு நேரங்களிலும் காவலர்கள் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர் எனவும் **மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இவ்வாய்வின் போது துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆப., அவர்கள், மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) திரு.பி.துரைசாமி, மண்டல அலுவலர் எஸ். அனிதா மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**